# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramasamy @ Kannan | Father/Husband Name: Muthaian | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.10.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் குருமூர்த்தி மற்றும் சிவா ஆவார்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 4 மணிக்குமேல் அம்பலகாரன்பட்டி ரோட்டில் தென்னங்கன்று என்ற பெரியகருப்பன் வயல் அருகே நானும் ராஜேந்திரன் என்பவரும் வயலுக்கு சென்றுகொர்ண்டிருந்தபோது சிவப்பு கலர் மாருதி காரில் 6 நபர்கள் வந்து காரிலிருந்து இறங்கினார்கள். அப்போது எ1 குருமூர்த்தி இவனை வெட்டுங்கடா என்று சொன்னார். அப்போது 4வது எதிரி ராஜா மற்றும் எ6 சிவலிங்கம் ஆகியோர் என்னை பிடித்துக்கொண்டார்கள். எ1 குருமூர்த்தி கத்தியால் எனது அடிவயிற்றில் குத்தினார். (சாட்சி அவரது வயிற்றில் இருக்கும் காயத்தழும்பினை காட்டினார்.) எ2 கார்த்திக் என்பவர் அருவாளை வைத்து எனது இடதுகை நடுவிரல் மற்றும் ஆட்காட்டி விரலையும் வெட்டினார். அதில் அந்த விரல்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது ரவிச்சந்திரன் என்பவர் ஆட்டோவை எடுத்து வந்து அதில் நான் வீட்டிற்கு வந்தேன். எத7 ஆரம்மாள், எ9 லெட்சுமி, எ8 அமுதா ஆகியோர் இவனை இன்னுமா கொல்லாமல் வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லி ஆட்டோவை மறித்து என்னை ஆட்டோவில் இருந்து என்னை இழுத்தார்கள். அப்போது என் மகன் ஆதி என்பவர் (12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தவர்) பள்ளியிலிருந்து திரும்பி வந்த அவரை எ2 கார்த்திக் என்பவர் விரட்டிச்சென்று அருவாளால் கழுத்தின் பின்றும் வெட்டி இரத்தக்காயப்படுத்தினார். எங்கள் ஊர்க்காரர்கள் எங்களை அவர்களிடமிருந்து

விலக்கிவிட்டார்கள். அப்போது எங்களை மருத்துவமனைக்கு செல்லவிடாமல் எதிரிகள் அணைவரும் எங்களை மறித்துக்கொண்டார்கள். அப்போது காவல் ஆய்வாளர் இராமச்சந்திரன் என்பவர் காவலர்களுடன் வந்து எங்களை அவர்களிடமிருந்து காப்பாற்றி மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு முதலுதவி பெற்றுக்கொண்டு மேல் சிவிக்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்ந்தோம். என்னிடம் காட்ப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெளழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும். அந்த புகாரை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் வந்து என்னிடம் வாங்கினார்கள். நான் மருத்துவமனையில் 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என் மகன் ஆதி ஒருவார காலம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமயில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 2

Name : Athi Father/Husband Name: Ramasamy

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 19.10.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் குருமூர்த்தி மற்றும் சிவா ஆவார்கள். கடந்த 20.12.08ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் நான் பள்ளிக்கூடம் சென்றுவிட்டு வந்துகொண்டிருந்தேன். அப்போது குருமூர்த்தியுடன் 8 பேர் சேர்ந்து என் அப்பாவை வெட்டிவிட்டதாக கூறினார்கள். அதை கேள்விப்பட்டு நான் வீட்டிற்கு வந்தபோது எதிரிகள் குரூமூர்த்தி சிவலிங்கம், ரவி, ராஜா, சிவலிங்கம் மைத்துனர்(பெயர் தெரியவல்லை) சிவா, லெட்சுமி, ஆரம்மாள், எங்கள் வீட்டின் வாசலில் அருவாளுடன் நின்றுகொண்டு வாடா உன்னையும் வெட்டத்தான்டா வந்திருக்கிறோம் என்று சொல்லி என்னை வெட்டுவதற்காக அருவாளுடன் விரட்டினார்கள். வீட்டை சுற்றி ஓடிவரும:போது சிவலிங்கமும், சிவாவும் என்னை பிடித்துக்கொண்டார்கள். ரவி என்னை பின்பக்கமாக பிடித்துக்கொண்டார். கார்த்திக் என்பவர் பெரிய வாள்கத்தி ஒன்றை வைத்துக்கொண்டு 10 மீட்டா தூரத்திலிருந்து என்னை வெட்ட வரும்வரை பிடித்துக்கொண்டார்கள். பிறகு கார்த்திக் என்பவர் பின்பக்க கழுத்தில் வெட்ட வந்தபோது நான் கழுத்தை குணிந்துகொண்டேன். பின்பக்க கழுத்தின் மேற்புறம் கத்தி பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. (சாட்சி அவர் கழுத்திலிருக்கும் பின்புற காயத்தழும்பினை காட்டினார்.) நான் காயம்பட்டு கீழே விழுந்ததும் பெண்கள் 3 பேரும் சேர்ந்து நான் போட்டிருந்த சீருடையை கிழித்து கட்டை மற்றும் கம்புகளால் உடம்பிலும் தொடையிலும் அடித்து காயப்படுத்தியபோது ரவி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் வந்து விலக்கிவிட்டார்கள்.

எங்கள் வீட்டிற்குள் என்னை உட்கார வைத்திருந்தார்கள். பிறகு நாங்கள் மருத்துவமனைக்கு செல்லாதவாறு எதிரிகள் மறித்துக்கொண்டார்கள். காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் 5பேருடன் வந்து எங்களை அழைத்துச்சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு மேல் சிக்சசைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். போலீசார் எங்களை மதுரை இராஜாஜி மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். நான் மருத்துவமனையில் ஒருவாரத்திற்கு மேலாக உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 3

Name : Ravi Father/Husband Name: Ganesan

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 19.10.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் கொட்டகுடி அருகில் காதர்ஷாபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் குருமூர்த்தி மற்றும் சிவா ஆவார்கள். சுமார் 8 அல்லது 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் ராமசாமி என்பவர் வயிற்றில் காயம்பட்டிருந்தார். அவரை காரில் ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம். பின்பு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜ மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் குரு மூர்த்தி வகையாறாவுடன் ஏற்பட்ட சண்டையால் ஏற்பட்டது என்று சொன்னார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.